# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1892/33 - 2014 දෙසැම්බර් මස 10 වැනි බදාදා - 2014.12.10

*1892/33 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

MP/2386

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன ஆகிய நான், இச்சபைக்கு குருநாகல் நீர் வழங்கல் மற்றும் உடல்நல திட்டத்தின் கீழ் கெட்டுவானை கழிவு நீர் பொம்பு நிலையத்தில் இருந்து கெட்டுவானை வரை குழாய் வழியை விரிப்பதற்காக காணித்துண்டுகளின் தாழ்மையான உரிமையை கைப்பற்றிக் கொள்வதற்கு தேவைப்பட்டிருப்பதால், இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளில் குறிப்பிடப்படும் காணித்துண்டுகளின் தாழ்மையான உரிமையை கைப்பற்றிக் கொள்வதை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.

தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன,
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
“லக்திய மெதுர”,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2014, நவெம்பர் 18.
5/2/1/1093

**அட்டவணை**

குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பிரதேச செயலகப் பிரிவில், 835 ஆம் இலக்க, குருநாகல் – கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் பல்லே கெட்டுவான கிராமத்தில் அமைந்துள்ள, தன்கஹமுல கும்புர – வட்டக்கா ஹேன கும்புர மற்றும் பக்மீகஹ கும்புர எனும் காணியின் மொத்த அளவில் இருந்து சுமார் 8.1 பேர்ச்சஸ் மொத்த விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லைகளினுள் இருக்கும் மூன்று காணித்துண்டுகள்.

**துண்டு இல. 01 :**

வடக்கு : அதிகாரி சொந்தம் கொண்டாடுகின்ற வயல் நிலம்;

கிழக்கு : இக்காணியின் மீதித் துண்டு ;

தெற்கு : இக்காணியின் மீதித் துண்டு ;

மேற்கு : திரு. நலின் தேஸப்பிரிய சேனாநாயக்க சொந்தம் கொண்டாடுகின்ற வட்டக்கா ஹேன கும்புர.

உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: திருமதி ஏ. பீ. நிமாலி சேனாநாயக்க,
இல. 109, கெட்டுவான வீதி
குருநாகல்.

**துண்டு இல. 02:**

வடக்கு : திரு. அதிகாரி சொந்தம் கொண்டாடுகின்ற வயல் நிலம் மற்றும் திரு. காமினி சந்திரசோம சொந்தம் கொண்டாடு கின்ற காணி ;

கிழக்கு : திருமதி ஏ. பீ. நிமாலி சேனாநாயக்க சொந்தம் கொண்டாடுகின்ற தன்கஹமுல கும்புர (மேட்டு நிலம்) மற்றும் இக்காணியின் மீதித் துண்டு ;

தெற்கு : இக்காணியின் மீதித் துண்டு ;

மேற்கு : திரு. ஏ. ஆர். எம். எஸ். அமரதுங்க சொந்தம் கொண்டாடுகின்ற பக்மீகஹ கும்புர.

*உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:* திரு. நலின் தேஷப்பிரிய சேனாநாயக்க,
இல. 109, கெட்டுவான வீதி
குருநாகல்.

**துண்டு இல. 03 :**

வடக்கு : திரு. காமினி சந்திரசோம சொந்தம் கொண்டாடுகின்ற காணி மற்றும் திரு. கித்சிரி சொந்தம் கொண்டாடுகின்ற வயல் நிலம் ;

கிழக்கு : திரு. நலின் தேஷப்பிரிய சேனாநாயக்க சொந்தம் கொண்டாடுகின்ற வட்டக்கா ஹேன கும்புர ;

தெற்கு : இக்காணியின் மீதித் துண்டு ;

மேற்கு : கெட்டுவானை சுற்ற வளைப்பு வழி வரையான வீதி.

*உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:* திரு. ஏ. ஆர். எம். எஸ். அமரதுங்க,
இல. 12/504, கண்டி வீதி,
குருநாகல்.

*12- 867*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.